# டிசம்பர் –24 – திருவருகைக்கால 04ம் ஞாயிறு

**கிறிஸ்து பிறப்பு நள்ளிரவுத் திருப்பலி**

**“இதோ கருவுற்று ஒரு மகனை பெறுவீர், அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்” (லூக்.1:31)**

## முதல் வாசகம் : 2 சாமுவேல் 7:1 – 5,8 – 12,14,16

அரசர் தம் அரண்மனையில் குடியேறியபின், சுற்றிலிருந்த எல்லா எதிரிகளின் தொல்லையினின்றும் ஆண்டவர் அவருக்கு ஓய்வு அளித்தார். அப்போது இறைவாக்கினர் நாத்தானைத் தாவீது அழைத்து, ”பாரும் நான் கேதுரு மரங்களாலான அரண்மனையில் நான் வாழ்கிறேன். கடவுளின் பேழையோ கூடாரத்தில் குடியிருக்கிறது” என்று கூறினார். அதற்கு நாத்தான் நீர் விரும்பிய அனைத்தையும் செய்துவிடும் ஏனெனில் ஆண்டவர் உன்னோடு இருக்கிறார் என்று அரசனிடம் சொன்னார். அன்று இரவே ஆண்டவரின் வார்த்தை நாத்தானுக்கு அருளப்பட்டது. நீ சென்று, என் ஊழியன் தாவீதிடம் ஆண்டவர் இவ்வாறு கூறுவதாகச் சொல் நான் தங்குவதற்காக எனக்கு ஒரு கோவில் கட்டப்போகிறாயா? எனது ஊழியன் தாவீதிடம் படைகளின் ஆண்டவர் இவ்வாறு கூறுவதாகச் சொல் என் மக்கள் இஸ்ரயேலின் தலைவனாக விளங்க புல்வெளியில் ஆடுமேய்த்துக் கொண்டிருந்த உன்னை நான் அழைத்தேன். நீ சென்றவிடமெல்லாம் நான் உன்னோடு இருந்தேன் உன் கண்முன் உன் எதிரிகள் அனைவரையும் அழித்தேன் மேலும் உலகில் வாழும் பெரும் மனிதர் போல் நீ புகழுறச் செய்தேன். எனது மக்களாகிய இஸ்ரயேலுக்கு ஓர் இடத்தை அளிப்பேன். அவர்கள் அந்த இடத்திலேயே வாழ வைப்பேன். என் மக்களாகிய இஸ்ரயேல் மீது நீதித் தலைவர்களை ஏற்படுத்திய நாள்களாகிய தொடக்ககாலத்தில் தீயவர்களால் அவர்கள் ஒடுக்கப்பட்டது போல இனியும் அவர்கள் அலைக்கழிக்கப்பட மாட்டார்கள். அனைவரின் தொல்லை களினின்றும் உனக்கு நான் ஓய்வு அளிப்பேன். மேலும் ஆண்டவர் தாமே உன் வீட்டைக் கட்டப்போவதாக அவர் உனக்கு அறிவிக்கிறார். உன் வாழ் நாள் நிறைவுபெற்று நீ உன் மூதாதையரோடு துயில்கொள்ளும் போது, உனக்கு பிறக்கும் உன் வழித்தோன்றலை உனக்குப் பின் நான் உயர்த்தி அவனது அரசை நான் நிலைநாட்டுவேன். நான் அவனுக்கு தந்தையாக இருப்பேன். அவன் எனக்கு மகனாக இருப்பான். அவன் தவறுசெய்யும்போது மனித இயல்புக்கேற்ப அடித்து, மனிதருக்கே உரிய துன்பங்களைத் தருவேன். என் முன்பாக உனது குடும்பமும் உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும்! உனது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்!

**பதில்பாடல் :** ஆண்டவரின் பேரன்பைப்பற்றி நான் என்றென்றும் பாடுவேன்

## இரண்டாம் வாசகம் : உரோமையர் 16 : 25 – 27

சகோதர சகோதரிகளே! இயேசும கிறிஸ்துவைப் பற்றி நான் பறைசாற்றும் நற்செய்திக்கு ஏற்ப வாழக் கடவுள் உங்களை உறுதிப்படுத்த வல்லவர். ஊழி காலமாக மறைபொருளாக இருந்த இந்த நற்செய்தி இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இறைவாக்கினர் வாயிலாக இது நமக்குத் தெளிவாகியுள்ளது. என்றும் வாழும் கடவுளின் கட்டளைப்படி எல்லா மக்களினங் களுக்கும் அது தெரிய வந்துள்ளது. இதனால் அவர்கள் நற்செய்தியைக் கேட்டு நம்பிக்கை கொள்வர். ஞானமே உருவாகிய கடவுள் ஒருவருக்கே இயேசு கிறிஸ்துவின் வழியாய் என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்.

## நற்செய்தி : லூக்கா 1 : 26 – 38

ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, ”அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து, ”மரியா, அஞ்சவேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது” என்றார். அதற்கு மரியா வானதூதரிடம், ”இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!” என்றார். வானதூதர் அவரிடம், ”தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை” என்றார். பின்னர் மரியா, ”நான் ஆண்டவரின் அடிமை உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்றார். அப்பொழுது வானதூதர் அவரை விட்டு அகன்றார்.

**தியானம்:** இயேசு என்னும் பெயருக்கு இம்மானுவேல் என்று பொருள் (மத்.1:23). இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்பது பொருள் (மத்..1:23) உலகத்தின் அதிபதியாக இருக்கக்கூடிய கடவுள் இதோ நம்மத்தியில், நம்மோடு நமக்குள் இருக்கிறார் என்பதன் மகிழ்ச்சியின் அடையாளம்தான் கிறிஸ்து பிறப்பு. மனித உள்ளம் கடவுளுக்காக ஏங்கும் போது கடவுளின் அன்பு அவனிலே மிகுந்து செயல்படுவதை இன்றைய முதல் வாசகத்தில் நாம் பார்க்கின்றோம். “வானினின்று ஆண்டவர் பார்க்கின்றார், மானிடர் அனைவரையும் காண்கின்றார்” (திபா.33:13) “ஆண்டவருடைய கண்கள் அவர்மேல் அன்புகூர்வோர்மீது உள்ளன, அவரே அவர்களுக்கு உறுதியான பாதுகாப்பு, வலிமைமிக்க துணை…. அவர் உள்ளத்தை உயர்த்துகின்றார், கண்களை ஒளிர்விக்கின்றார், நலமும் வாழ்வும் ஆசியும் அருள்கிறார்” (சீரா 34:16-17). கடவுள் நம்மீது காண்பித்த அன்புக்குப் பிரமாணிக்கமாக அவரை நன்றியோடு நினைக்கும்போது அவர் நம் குடும்பங்களை ஆசீர்வதிக்கின்றார். எந்த நிலையில் நான் இருந்தேன் இப்போது கடவுள் என்னை எந்த நிலையில் வைத்திருக்கின்றார், கடவுளின் இரக்கமும் கருணையும் என்னையும் என் குடும்பத்தையும் எந்த நிலையில் உயர்த்தியிருக்கின்றது என்பதை நாள்தோறும் நினைத்து, தாவீதைப்போல நாமும் கடவுளுக்கு நன்றியுள்ளவர்களாக வாழும்போது நம்முடைய குடும்பங்களிலும் கடவுள் நிதமும் தங்குவார். அடுத்ததாக கிறிஸ்து எதற்காக இந்த உலகத்திற்கு வந்தார் என்றால் நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து விடுவிப்பதற்காக (மத்.1:21). பாவத்தில் மனிதன் இருக்கும் மட்டும் மனிதனால் கடவுளைக் கண்டு கொள்ள முடியாது. பாவத்தையும் பாவத்தின் அதிபதியாக இருக்கக்கூடிய சாத்தானையும் முறியடிப்பதற்காக இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். “சாவின் வழியாய் பாவம் ஆட்சி செலுத்தியது போல், நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் வழியாய் அருள் ஆட்சி செய்கின்றது. அந்த அருள்தான் மனிதர்களைக் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக்கி, நிலைவாழ்வு பெற வழிவகுக்கின்றது” (உரோ.5:21). பாவத்தால் நாம் இழந்த அருள்வாழ்வை கிறிஸ்து தம்முடைய பிறப்பினால் ஈடுசெய்கின்றார். “அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது” (யோவா1:9) “இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளிதரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது” (லூக்.1:78-79). இயேசுவின் துணைகொண்டு சரியானவற்றை வாழ்க்கையில் தேர்ந்து கொண்டு ஒளிபெற்ற மக்களாக வாழ வேண்டும். அப்போது கடவுளின் கருணையும் இரக்கமும் மென்மேலும் நம்மைக் காக்கும்.